**குளியாப்பிட்டிய நகர சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 15 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குளியாப்பிட்டிய நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி பெறுமதி ரூபா 323,235 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றக்களில் அம்மீதி ரூபா 2,261,052 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாட்குறிப்ப மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிய தருகின்றேன் |
| (ஆ) | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு ரூபா 10,357,706 ஆக இருந்த போதும் ஐந்தொகையில் கையிலுள்ள இருப்பு பெறுமதி ரூபா 33,519,895 என காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடு ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மொத்த இருப்பு கூடுதுலாக கணக்கீடு செய்வதற்கான காரணங்களை ஆராய்ந்து, பல ஆண்டுகளாக களஞ்சியத்தின் பெறுவனவுகள் ரசீதுக்கு கணக்கீடு செய்வதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் வழங்கிய களஞ்சிய நாட்குறிப்பு தவறானவை அல்ல |

| | | | |
|---|---|---|---|
| | | | சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. எதிர்காலத்தில் அவை விசாரிக்கப்பட்டு திருத்தப்படும் என்பதை அறிய தருகின்றேன் |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் 02 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட மீதிகள் அவற்றிற்குரிய உரிய பயன்பாட்டு பதிவேடுகளுக்கிடையே ரூபா 8,717,998 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடு ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணக்கமின்மைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியதருகின்றேன் |
| (ஈ) | ரூபா 93,584,508 பெறுமதியான 04 கணக்கு விடயங்களுக்குரிய வைப்புச் சான்றிதழ்கள் ∴ சேமிப்பு பாஸ் புத்தகங்க்ள மற்றம் விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகி ன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இது ஒரு சேமிப்புக் கணக்கு, ஒரு நிலையான வைப்பு அல்ல எனவும் கடன்பட்டோர்களின் சுருக்க அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவு ம் நூலக புத்தகங்களைப் பொறுத்தவரை அட்டவணைகளை வைத்திருப்பது சிரமம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,421,164 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,375,416 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ை. | வீதவரியும் வரியும் | 15இ184இ287 | 16இ127இ292 | 13இ904இ787 | 12இ408இ429 | 15இ034இ287 | 15இ370இ630 | 12இ229இ277 | 10இ767இ844 |
| ை ை. | வாடகை | 16இ458இ200 | 16இ179இ115 | 16இ214இ997 | 404இ785 | 15இ702இ200 | 15இ810இ237 | 3இ230இ028 | 540இ587 |
| ை ை ை. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 17இ525இ100 | 15இ118இ249 | 15இ115இ249 | 3இ000 | 15இ455இ100 | 16இ079இ014 | 16இ079இ014 | - |
| ைை. | ஏனைய வருமானம் | 118இ697இ420 | 116இ129இ367 | 38இ488இ594 | 37இ925இ424 | 110இ722இ243 | 118இ105இ767 | 85இ160இ891 | 76இ665இ050 |
| | மொத்தம் | 167இ865இ007 | 163இ554இ023 | 83இ723இ627 | 50இ741இ638 | 156இ913இ830 | 165இ365இ648 | 116இ699இ210 | 87இ973இ481 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 12,384,796 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 6,494,901 தொகை ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்கான நிலுவையாக இருந்தது. எனினும் அந்நிலுவை தொடர்பாக நகர சபை கட்டளைச்சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் சேகரிக்க அறவிடப்பட வேண்டும். | 2018.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்குரிய 07 ஆதங்களிலிருந்து ரூபா 454,785 அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவைத் தொகையில் இதுவரை ரூபா 128,870 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. அத்துடன் 2019.05.30 ஆந் திகதி வரை ரூபா 309,374.61 நிலுவையாக காணப்பட்டது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக முத்திரைக் கட்டணம் ரூபா 22,672,719 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்காக நீதிமன்றத் தண்டப்பண வருமானம் பட்டியலிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அறவிடப்பட நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன வேண்டும். | இந்நிலுவை யை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இனங்காணப்பட்ட 08 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 10,347,699 நிதிஏற்பாடு ஓதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் செயற்திறனான செயற்திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டின் பிரகாரம் நடடிக்ஜ எடுக்க வேண்டுமெனவும் 2019 ஆம் ஆண்டில் அவற்றை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் அறிய தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 54,999,271 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 21,007,621 தொகை ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்கான நிலுவையாக இருந்தது. | பெறவேண்டிய மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம்மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலவி வரும் ஓய்வூதிய திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,900,132 தொகை ரூபா 3,776,729 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர், ரூபா 3,892,862 ஆன 02 ஆண்டுகளை மிகைத்த பொது வைப்புக்கள் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய ஓய்வூதியம் மாதாந்த தவணையுடன் மேலும் ரூபா 50,000 வீதம் கொடுப்பனவு செய்ய நிதிக் குழு தீர்மானித்துள்ளதுடன் மேலும் தீர்வுசெய்ய வேண்டிய மீதிகளை தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்று ஊழியர்களிடமிருந்து ரூபா 81,735 ஆன பிணை வைப்புக்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பிணை வைப்புக்களை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்வுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உடுபத்தாவ நீர்சுத்திகரிப்பு நிலையத்தில் நீர் பிரதேசத்தில் பொருத்தப்ப்டிருந்த ரூபா 2,189,152 பெறுமதியான புதிய நீர் பம்பி மற்றும் பழைய நீர் பம்பி உரிய இயலளவில் செயற்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | திருத்த வேலைகள் துரிமாக மேற்கொண்டு பொது மக்கள் சேவைகளை வழங்க திட்டமிட வேண்டும். | இதுதொடர்பாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் ஒரு பம்பி ஏற்கனவே பம்ப் செய்யப்பட்டு வருவதுடன் விரைவில் பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, தேவையான பழுது பார்ப்பு சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பொப் கட் இயந்திரமொன்றும் கழிவு முகாமைத்துவம் அமைந்துள்ள 05 ஏக்கர் மாத்திரம் காணியை சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கப்படாத சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சுளு-1684 பாப்காட் இயந்திரத்தை எதிர்காலத்தில் கையேற்கவும் கழிவு முகாமைத்துவம் அமைந்துள்ள காணியை நகரசபைக்கு கையேற்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இணக்கம் காணப்பட்டுள்ளன. |

### 3.5.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி குறிப்பிடப்படாத ஒரு சொத்தும் ரூபா 76,125,000 பெறுமதியான 03 சொத்துக்ளும் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்கள் திருத்தம் செய்ய அல்லது கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்தம் செய்து பயன்படுத்தவோ அல்லது கைதவிர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறியதருகின்றேன் |

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவின் உத்தியோகத்தர் களுக்கு ஏனைய கடமைகளை கடமைகளும் கையளிக்கப்பட்டிருந்த மையால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவின் சுயாதீனம் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையிலுள்ள ஊழியர் எண்ணிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாததுடன் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்விற்கு தடையில்லாத வகையில் கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளன. |